# தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | காலை 9.30 | கன்னிவாடி |
| 2. | காலை 10.15 | வடுகபட்டி |
| 3. | காலை 11.00 | கணபதிபாளையம் |
| 4. | காலை 11.45 | தளவாய்பட்டணம் |
| | மதிய உணவு இடைவேளை | |
| வ.எண் | நேரம் | இடம் |
| 1. | மாலை 3.30 | பெரியார் சிலை |
| 2. | மாலை 4.15 | அரசு மேல்நிலைப்பள்ளி (கோட்டைமேடு) |
| 3. | மாலை 5.00 | பூளவாடி ரோடு கார்னர் |

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

## மின்வாரியத் தலைமையகத்தில் முதல்வர் விஜய்

# REVIEW செய்யவில்லை - REELS தான் எடுத்துவிட்டு வந்திருக்கிறார்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!




சென்னை, செப்.28-

மின்வாரியத் தலைமையகத்தில் முதல்வர் விஜய் Review செய்யவில்லை - Reels தான் எடுத்துவிட்டு வந்திருக்கிறார் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் சாடியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளயிட்டுள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

**த.வெ.க. ஆட்சியில் அமைச்சர் பெருமக்களுக்கே இந்த நிலை என்றால், சாமானிய மக்களின் கதி என்ன என்பதைச் சொல்லவே தேவையில்லை.**

**இரண்டு நாட்களுக்கு முன், மின்வாரியத் தலைமையகத்தில் முதலமைச்சர் Review செய்யவில்லை. Reelsதான் எடுத்துவிட்டு வந்திருக்கிறார் போல.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, மதுராந்தகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட செயலாளர்கள் க.சுந்தர், எம்.எஸ்.தரணிவேந்தன் மற்றும் மல்லை.சத்யா கழக நிர்வாகிகள் இருந்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தென்னிந்திய திருச்சபை மற்றும் திருச்சி தஞ்சாவூர் திருமண்டலம், தாராபுரம் எல்லீஸ் நினைவு ஆலயத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கழக மகளிர் அணி துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், திருச்சி மேயர் மு.அன்பழகன், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ரகு, முன்னாள் எம்பி ஞானதிரவியம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, தாராபுரம் நகர செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர் மன்ற உறுப்பினர் கு.பாப்புகண்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



இன்று : 28.09.2026 (திங்கட்கிழமை)

| வ.எண் | நேரம் | ஒன்றிய/நகர/பேரூர் கழகங்கள் | இடம் |
|---|---|---|---|
| 1. | மாலை 5.00 | குண்டடம் மேற்கு ஒன்றியம் | மானூர்பாளையம் |
| 2. | மாலை 6.00 | தாராபுரம் மேற்கு ஒன்றியம் | கோவிந்தாபுரம் |
| 3. | இரவு 7.00 | தாராபுரம் கிழக்கு ஒன்றியம் | மணக்கடவு |
| 4. | இரவு 8.00 | மூலனூர் மேற்கு ஒன்றியம் | கிளாங்குண்டல் |

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி

## ‘எந்தப் பெண்ணையும் தவறாகப் பேச விடமாட்டேன்’ எனும் முதல்வர் விஜய் –

# மேயர் பிரியாராஜன் மீது த.வெ.க.வினர் நடத்தும் தாக்குதல்களை எதற்கு அனுமதிக்கிறார்?

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, செப்.28-

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள டிவிட்டர் பதிவு வருமாறு:-

பொதுவாழ்வில் இருக்கும் பெண்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் தொடர்ந்து கேலிக்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்படக் கூடாது. ஆணாதிக்கம் நிறைந்த அரசியல் களத்தில் ஒரு பெண் நுழைவதே சவாலானது; ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் அரசியலில் தனக்கான இடத்தை உருவாக்கிக்கொள்வது அதைவிடக் கடினமானது.

இந்தத் தடைகளைத் தாண்டி முன்னேறும் பெண்களை குறிவைத்து தனிப்பட்ட முறையில் தாக்குவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. மேயர் பிரியா ராஜன் அவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடத்தப்படும் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட தனிப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

“எந்தப் பெண்ணையும் தவறாகப்பேசவிடமாட்டேன்” என்று முதலமைச்சர் விஜய் கூறுகிறார். அப்படியிருக்க, மேயர் பிரியா ராஜன் மீது அவரது ரசிகர்களும், அவரது கட்சியினரும் நடத்தும் இந்தத் தாக்குதல்களை எதற்காக அவர் அனுமதிக்கிறார்?

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் புனித சி.எஸ்.ஐ. தூய தோமா ஆலயத்தின் முன்பு திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்பி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் தாராபுரம் நகர செயலாளர் எஸ்.முருகானந்தம், வெ.கமலக்கண்ணன், திருப்பூர் வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் ஈ. தங்கராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.